# பிரேம வாஹினி

பகவான்

ஸ்ரீ சத்ய சாயி பாபா

### 1. Good Character is Spiritual Power

## சாதகருக்குரிய சிறந்த இயல்புகள்:

விவேகம் பெறுவதற்குரிய வழிகள் முந்திய யுகங்களைவிட கலியுகத்தில் அதிகம். நீங்கள் விரும்பியபடி கல்வி அளிப்பதற்கு எத்தனையோ பள்ளிகளும் நிறுவனங்களும் உள்ளன. சிறிது முயற்சி செய்தால் நியாயமான முறையில் சொத்து சேர்ப்பதற்கு எத்தனையோ வழிமுறைகள் உள்ளன. இத்தனை இருப்பினும் மனிதனிடம் மகிழ்ச்சியும் சாந்தியும் அதிகரிக்கக் காணோம். உள்ளபடியே மற்ற யுகங்களைவிட இப்போது துன்பந்தான் அதிகமாகக் காணப்படுகிறது.

அதற்கு என்ன காரணம்? காரணம் மானிடனின் நடத்தையிலும் அவன் வாழும் முறையிலும்தான் இருக்கிறது. பரிணாமத்தில் மானிட வாழ்வே மிகமிக உன்னதமானது என்பதில் சந்தேகமில்லை; புனிதம் எனும் பொருளுக்கேற்ப வாழ ஆன்மீக முயற்சி இன்றியமையாதது; அம்முயற்சி புனிதமானதாக, தூயதாக இருக்க வேண்டும். இந்த வாழ்க்கைக்கு நன்னடத்தை (character) எல்லா வகையிலும் முக்கியமானது. நன்னடத்தை அழியா வாழ்வை அளிப்பது; மரணத்துக்கப்பாலும் வாழ்வது அது. அறிவே ஆற்றல் மிக்கது எனச் சிலர் சொல்கின்றனர்; ஆனால் அது உண்மையல்ல; நன்னடத்தையே ஆற்றல் மிக்கது. அந்த அறிவைப் பெறுவதற்கு நன்னடத்தை தேவை. எனவே தீமையின் சுவடே இல்லாத நன்னடத்தை பெற ஒவ்வொருவரும் முயல வேண்டும்.

இன்றைக்கும் புத்தர், ஏசு நாதர், சங்கராச்சார்யார், விவேகானந்தர், பெரிய யோகிகள், முனிவர்கள், இறையடியார்கள் முதலியோர் நம் நினைவில் உயர்வாக மதித்துப் போற்றப்படுகின்றனர் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். எல்லோரும் எந்நேரமும் அவர்களை நினைக்கும்படிச் செய்தது எது? அவர்களுடைய நடத்தைதான் என்று நான் சொல்கிறேன்.

நல் நடத்தையில்லாத கல்வி, சொத்து, சமுதாய அந்தஸ்தால் ஒரு பயனும் இல்லை. மலரின் தகுதியும் மதிப்பும் அதன் மணத்தைப் பொருத்தே அமைகிறது. கவிஞர்கள், ஓவியர்கள், விஞ்ஞானிகள் அவரவர் துறையில் மேதைகளாக இருக்கலாம்; ஆனால் நன்னடத்தை இல்லையேல் அவர்களால் சமூகத்தில் நிலைக்க முடியாது.

உன்னத நிலை அடைய நன்னடத்தை இன்றியமையாதது; அது சமுதாயத்தில் நாம் மரியாதை செலுத்தும் அனைவரிடமும் இருக்கிறதா? எனும் ஐயம் நிச்சயமாக எழக்கூடும். ஆனால் நான் இங்கே குறிப்பிடுவது, சில நிலையான நெறிமுறைகளை உறுதியுடன் பின்பற்றும் சமுதாயத்தையும் நன்னடத்தையையும் பற்றித்தான். தெளிவில்லாத சமுதாயத்தில் நடத்தையும் நாகரிகமும் தினமும் மாறிக்கொண்டே இருக்கும்; சமுதாயம் சாதாரணமாக அந்த நிலையற்ற நடத்தைக்குத்தான் முக்கியத்துவம் தருகிறது. ஆனால் முக்கியமானதும் அடிப்படையானதுமான மாசிலா நடத்தையே நிலையானது. சமுதாயம் எப்படியும் மாறலாம்; ஆனால் அது மாறக்கூடாது. அழியாத இன்னொன்று ஆத்மா; அந்த ஆத்மாவுடன் அதற்குத் தொடர்பு இருக்கிறது. எனவே அந்த அடிப்படையிலும் அது நிலையானது.

2. Reshape character by cultivating noble qualities

## உன்னத குணங்களால் நன்னடத்தையை உருவாக்கலாம்

மிகமிக உன்னதமான குணங்களான அன்பு, பொறுமை, சகிப்புத்தன்மை, வைராக்யம், தர்மம் முதலியவை மாசிலா நன்னடத்தையை உருவாக்குபவை; அவற்றை மதிக்க வேண்டும்.

அன்றாடம் நாம் செய்யும் நூற்றுக்கணக்கான சிறு செயல்கள் பழக்கங்களாக வலுப்பெறுகின்றன. அந்தப் பழக்கங்கள் மதிநுட்பங்களாக மாறி நமது வாழ்விற்கும், போக்கிற்கும் வடிவம் அமைக்கிறது. கற்பனையில் நாம் நெய்பவை, நாம் தேடும் லட்சியங்கள், உழைப்பின் பலன்கள் அனைத்தும் மனதில் அழியாத பதிவுகளை ஏற்படுத்துகின்றன. இந்தப்பதிவுகள் பதிந்து பதிந்து நமது அறிவாகவும், நம்மைச் சுற்றியுள்ள உலகக் காட்சியாகவும் உருவம் பெறுகிறது; நாம் பற்றுதல் வைப்பது இந்த படக்காட்சியில் தான்.

கடந்த காலத்தில் நெடுநாட்களாகப் பழகிய பழக்கங்களே மனிதனின் நிகழ்காலமாகும். நடத்தையின் இயல்பு எப்படிப்பட்டதாக இருப்பினும், அது தற்போதைய நடைமுறையில், இருப்பினும், நமக்குப் பழக்கமாகிவிட்ட அந்த எண்ணங்களையும் கற்பனைகளையும் மாற்றியமைப்பதன் மூலம் நடத்தையையும் மாற்றி அமைத்து விடமுடியும்.

திருத்த முடியாத தீய நடத்தை எதுவும் இல்லை. கொள்ளைக்காரனான அங்கூலிமாலா புத்தரின் அன்பு உள்ளத்தால் திருந்தவில்லையா? இதயப்பூர்வமான முயற்சி, பழக்கங்கள் மூலம் நடத்தையைத் திருத்தி விடலாம். மனிதனுக்குள் மனித சக்திக்கு உட்பட்டு தீயப்பதிவுகளுக்கு அறைகூவல் விடும் ஆற்றலும் தீயப்பழக்கங்களை மாற்றும் ஆற்றலும் எப்போதும் இருக்கிறது.

தன்னலமற்ற சேவை மூலம், துறவு மூலம், முயற்சி மூலம், வழிபாடு மூலம், பகுத்தறிவதன் மூலம் மனிதனை உலகுடன் பந்தப்படுத்தும் பழைய பழக்கங்களிலிருந்து விடுவிக்க முடியும்; தெய்வீக மார்க்கங்கள் மூலம் நம் வாழ்வில் புதிய பழக்கங்களை நிலை நிறுத்தவும் முடியும்.

ஆன்மீக இலக்கியங்கள், கவிதைகள், இதிகாசங்கள், நூல்கள், இதழ்கள் முதலியவை செயல்படுவதன் நோக்கம் நடத்தையில் இயல்பையும், அதன் வழிமுறைகளையும் புதிரான போக்கையும் திருத்தி அமைப்பதற்காகத்தான்; சனாதன சாரதி இந்த குறிக்கோளுக்காகத்தான் வெளியிடப்படுகிறதே ஒழிய பொருட்காட்சியின் விளம்பரத்துக்காகவோ, பெயரும் புகழும் அடைவதற்காகவோ அல்ல.

ஆனால் வெறுமனே ஒரு நூலை அல்லது மாத இதழைப் படித்துவிடுவதால் விவேகம் வந்துவிடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எது பார்க்கப்படுகிறதோ, கேட்கப்படுகிறதோ, படிக்கப்படுகிறதோ அதை நடைமுறை வாழ்வில் செயல்படுத்த வேண்டும். பொழுது போவதற்காக ஏதாவது படிக்கப்பட்டால் பொழுது போகுமே ஒழிய எதுவும் மிஞ்சாது.

3. **Read Life histories of saints and sages**

## நூல்களைக் கற்றலும் மனதை ஒருமைபடுத்துதலும்

நூல்கள் மிகவும் மலிவான விலையில் மலை மலையாகக் கிடக்கின்றன. வேதங்கள், சாத்திரங்கள், புராணங்களைப் பெறமுடியும். ஒவ்வொருவரும் படிக்கவும் முடியும்; குருமார்களுக்கும் பஞ்சம் இல்லை. கல்வி நிலையங்களும் எண்ணற்றவை. அவை அளிக்கும் கல்வியும் ஆடம்பரமானவை. மனப்பயிற்சிக்குரிய வசதிகள் எல்லையற்றவை; வெகு அருகில் இருப்பவை. இருப்பினும் ஞானத்தேனைப் பருகும் திருப்தி எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

நூல்கள் எங்கும் குவிந்து கிடப்பதை நான் பார்க்கும்போது அவற்றிலுள்ள விவேகம் அதன் கட்டமைப்புகளை (binding) தாண்டி வெளியே வராது என்று நான் உணர்கிறேன். பேராசை, சினம், பொறாமை, சினம் எனும் மலைப்பகுதிகளால் இறைவன் மறைக்கப்பட்டிருக்கிறார். அதைப்போலவே விவேகம் எனும் சூரியனும் புத்தகக் குவியலால் மறைக்கப்பட்டிருக்கிறது. உலகின் எல்லா மூலைகளிலும் இந்நூல்கள் சிதறிக் கிடப்பினும் பண்பாடும் விவேகமும் வளர்ந்துவிட்டதாக நாம் கூற இயலாது; நரன் வானரத்திலிருந்து வெகுதூரம் விலகாமலே இன்னும் இருக்கிறான். அழகான கட்டமைப்பு, தலைப்பு, கவர்ச்சியான படம் இது போன்ற நிலையற்ற இன்பங்களையும், நொடிப்பொழுது திருப்தியையுமே வாசகர்கள் நாடுகின்றனர்.

விவேகம் உள்ளவர்களே சிறந்த நூலைத் தேர்ந்தெடுப்பர். வாசித்தபடி வாழ்ந்து காட்டுவர். அதன்மூலம் சத்தியத்தை உணர்ந்து நிலையான ஆனந்தத்தை அனுபவிப்பர்; இவர்கள் மட்டுமே வாழத்தகுதி உடையவர்கள். எனவே அதி உன்னதமான வழியில் செல்ல விரும்புவர்களும் இறைச்சிந்தனையிலேயே ஈடுபடுபவர்களும் மகான்கள், யோகிகளின் வாழ்க்கை வரலாறுகளையே படிக்க முயலவேண்டும்; அது தெய்வீகத்தில் ஒன்ற உதவும். குறிக்கோளில்லாமல், சில்லறை விசயங்களையும் கைக்குக் கிடைத்தவற்றையும் படித்தால் அது குழப்பத்தையும் விபரீதமான விளைவுகளையும் உண்டாக்கும். அதனால் ஒரு லாபமும் இல்லை. சாந்தியும் கிட்டாது.

4 Cultivate one-pointedness and equal vision

## ஒருமை மனதையும் சம நோக்கையும் வளர்த்துகொள்ளுங்கள்

அனைத்துக்கும் மேலாக, எதைச்செய்தாலும் ஒருமை மனதுடன் செய்யப் பழகுங்கள். சமநோக்கு சுபநோக்காக இருக்கும்.

சிங்கம் வன அரசனாக இருந்த போதும் மரங்களுக்கிடையே நடக்கும்போது ஒவ்வொரு முறையும் சில அடிகள் வைத்த பின், தன்னை யாராவது பின் தொடர்கிறார்களா என்று இப்படியும் அப்படியும் திரும்பிப்பார்க்கும். மனதிலுள்ள பயம் அதை அப்படிப்பார்க்கச் செய்கிறது. இதயத்திலுள்ள பலாத்கார உணர்வு பார்வையை மங்கலாக்கிக் காட்சியைச் சிதைத்து விடும்.

மனிதனிடம் சமநோக்கு இருத்தல் வேண்டும். தன் கண்ணில்படும் அனைத்துப் படைப்புகளையும் (சமமான) மங்கலம் உடையனவாகக் கருதவேண்டும். தன்னிடம் எத்தனை நம்பிக்கையும், அன்பும் இருக்கிறதோ அத்தனை நம்பிக்கையும் அன்பும் எல்லா உயிர்களிடமும் இருக்க வேண்டும். ஏனெனில் படைப்பில் தீமை உடையதாக எதுவும் இல்லை. ஒருசிறு அணுகூட இல்லை. தவறான பார்வை காரணமாகவே அது தீயதாகத் தோன்றுகிறது. நாம் அணியும் கண்ணாடியின் வண்ணத்துக்கேற்ப படைப்புகள் நோற்றமளிக்கின்றன. தன்னளவில் அது நிலையான தூய்மையும் புனிதமும் உடையதே.

உடல், உள்ளம் அறிவின் ஆற்றல்களை முழுமையாக ஒருமுகப்படுத்துவதன் மூலம் அதிஉன்னத நிலையை அடையமுடியும். அவற்றை வெளிப்படுத்துவதற்கும் போதிப்பதற்குமுரிய குருமார்கள் எப்போதும் இருந்திருக்கிறார்கள்; இருக்கிறார்கள்; இருப்பார்கள். மனித மனம் வெளிப்பொருள்களில் களிப்புக்கொள்வதும் அர்த்தமற்றவற்றை கவனிப்பதும், வெளி உலகை விமர்சிப்பதுமாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஒன்றை உறுதியுடன் இருக்கும்படிப் பயிற்சியளிப்பது எப்படி?

கீழ்க்காணும் வினாக்களை ஒவ்வொருவரும் வினவவேண்டும். மஹாத்மாக்களும் மகான்களும் என்னைப் போன்றவர்கள்தானே; அவர்களும் என்னைப்போல் உடல் பெற்றவர்கள்தானே! அவர்கள் அடைந்த முழுமைப்பேற்றை அவர்களது முறைகளைப் பின்பற்றி நானும் அடையமுடியுமல்லவா? மற்றவர்களின் குறைகளையும் குற்றங்களையும் கண்டுபிடிப்பதால் நான் அடையும் லாபம் யாது?

5 First search and correct faults within yourself

## சாதனை - அதுதான் வாழும் வழி

எனவே உனக்குள் உள்ள குற்றம் குறைகளைக் கண்டுபிடித்து, அவற்றைத் திருத்தி முழுத்தூய்மை பெறுவதே முதல் சாதனையாகும்.

ஒருவரின் இறுதி நாள் இனிமையாகவும் உவகை அளிப்பதாகவும் இருக்க வேண்டுமெனில் இதைக் குறிக்கோளாகக் கொண்டு அதை நியாயமாக அடையும் வகையில் ஒவ்வொரு நாளும் இடைவிடாமல் உழைக்க வேண்டும். ஆனால் ஒவ்வொரு நாளுக்கும் மாலை நேரமும் இருக்கிறது. அன்றைய பொழுது நல்ல செயல்களில் செலவிடப்பட்டால் நாம் ஆழ்ந்த நித்திரையில் அமிழும்படி அந்த மாலை வேளை ஆசீர்வதிக்கிறது. அது உற்சாகமும் ஊக்கமும் அளிக்கவல்லது. சமாதிக்குச் சமமானது எனச் சொல்லபடுகிறது.

மனிதன் இம்மண்ணில் வாழும் காலம் குறுகியது. ஆனால் ஒருவர் நேரத்தைப் புத்திசாலித்தனமாக, எச்சரிக்கையுடன் செலவழித்தால் இந்தக் குறுகிய காலத்திலும் தெய்வீக ஆசீர்வாதத்தைப் பெறமுடியும். ஒரே அச்சில் வார்க்கப்பட்டவர்போல் ஒரே தோற்றம் உடைய இருவர் உள்ளனர்; ஒரே சூழலில் வளரவும் செய்கின்றனர்; ஆனால் ஒருவர் தேவதையாகவும், மற்றவர் சாதாரணமானவராகவும் இருக்கிறார். வளர்ச்சி இப்படி வேறுபட என்ன காரணம்? பழக்கங்கள், அவற்றிலிருந்து உருவாகும் நடவடிக்கைகள், திண்மை பெறுவதால் ஏற்படும் நடத்தைகளே காரணம். நடத்தை உடைய ஓர் உயிரே மனிதன்.

### 6. Life is a selfless loving sacrifice

## மனித வாழ்வின் உண்மையான இயல்பு

மேற்போக்காக நோக்கும்போது, மனிதவாழ்வு முடிவில்லாமல் மீண்டும் மீண்டும் உண்பதிலும், பருகுவதிலும், உழைப்பதிலும், உறங்குவதிலும் கழிவது போல தோன்றுகிறது. ஆனால் உண்மையில் வாழ்க்கை மிகப்பெரிய பொருள் உடையது; அதி ஆழமான உள்ளர்த்தம் உடையது. வாழ்வு ஒரு தியாகம், ஒரு யக்ஞம். ஒவ்வொரு சிறு செயலும் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படுவது. ஒவ்வொரு நாளும் இந்தச் சரணாகதி மனப்பாங்குடன் செயல்படுவதில் செலவாகுமாகில் தூக்கம் சமாதி நிலையாகிவிடும்.

மனிதன் செய்யும் பெருந்தவறு தன்னை உடலாக எண்ணுவது. உடலை வலுப்படுத்தவும் வசதிபடுத்தவும் பலவகையான பொருள்களை அவன் குவித்து வைத்திருக்கிறான்; உடல் தளர்ச்சி பெற்று முதுமையுற்றபோதும் ஏதாவதொரு வழியைப் பின்பற்றி அதை நிமிர்த்த முயல்கிறான். ஆனால் இப்படி எத்தனை காலத்துக்குச் சாவை ஒத்திப்போடமுடியும்? யமனின் ஓலை வந்தவுடன் புறப்பட்டாக வேண்டும். சாவு வந்தவுடன் அந்தஸ்து, அதிகாரம், ஆணவம் அனைத்துக்கும் சாவுமணி அடிக்கப்படுகிறது. இதை கருத்தில் கொண்டு இரவும் பகலும் எல்லா உயிர்களுக்கும் உடல், உள்ளம், ஆன்மத்தூய்மையுடன் சேவை

செய்து அதி உயர்வான ' தான் ' ஐ உணருங்கள். ஆனால் இந்த உடம்பு நீங்கள் அல்ல என்பதையும் நீங்களாக இருக்க முடியாது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

7. Thou art That - **தத்வமஸி**

(தத் த்வம் அசி) ' நீ அதுவாக இருக்கிறாய் ' மிகமிக உன்னதமான, மிகமிகப் புனிதமான மகாவாக்கியம் இது. அசைக்கவே முடியாத ஆத்ம தத்துவம் நீங்கள். இந்த ஆத்ம தத்துவத்துக்காகவே நீங்கள் உடல் பெற்றிருக்கிறீர்கள்; எனவே பரமேஸ்வரனை இப்போதே, இங்கேயே உணரும் முயற்சியில் இந்த உடம்பை எந்த நிமிடமும் தியாகம் செய்ய, தத்தம் செய்ய நீங்கள் தயாராக இருக்க வேண்டும். உலகின் நலன் மேம்படுவதற்கு இந்த உடம்பின் மீது உங்கள் அதிகாரத்தைச் செலுத்துங்கள். இந்த உடம்பு வெறும் கருவிதான், இறைவனால் அளிக்கப்பட்ட கருவி; அது அதன் நோக்கத்தை நிறைவேற்றட்டும்.

ஆனால் அது எந்த நோக்கத்திற்காக அளிக்கப்பட்டதோ அதை உணரும் வரையில் அதை எச்சரிக்கையுடன் கவனிப்பது, தேய்ந்து விடாமல் பழுதுபடாமல் பாதுகாப்பதும் உங்கள் கடமையாகும். குளிர்காலத்தின் ஊசிமுனை ஊடுருவல்களிலிருந்து உடலைப் பாதுகாக்க உல்லன் ஆடைகள் அணியப்படுகின்றன. ஆனால் குளிர் குறைந்தவுடன் அதைக் கிடப்பில் போட்டுவிடுகிறோம். அதைப்போலவே உலக வாழ்வின் குளிர்த்தாக்குதல் நம்மைப் பாதிக்காதபோது உடம்பைப் பொருட்படுத்துவதில்லை. அப்போது ஒருவர்க்கு அழியாத உடம்பைப் பற்றிய சிந்தனை மட்டுமே இருக்கும்.